செ.வெ.எண். 48/டிசம்பர் தேதி : 30.12.2016

# தருமபுரி மாவட்டத்தில் நிகழும் சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தருமபுரி மாவட்டம், ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிட கூட்டரங்கில் நிகழும் சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டம், ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டு தக்க அறிவுரைகள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் சாலைப் பாதுகாப்பு, சாலை விபத்துக்களால் ஏற்படும் இறப்புகளை குறைத்தல், சாலை விபத்துக்களை தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டி கங்காதர்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாப்பாத்தி, வருவாய் கோட்ட அலுவலர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), இணை இயக்குநர் (மருத்துவம்), அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் பிறதுறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.